DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, THOOTHUKUDI.

Calendar ...
Miscellaneous
(Chapte...
Preliminary Register ...
Sessions ...

DEPOSITION OF WITNESS

SC. Case No. 41/2019

Deposition of witness for
Prosecution - P.W. 2
Defence
Court

Name சமுத்திரம் என்ற சமுத்திரபாண்டியன்

Father's Name

Village

Taluk

Caste

Calling

Religion

Age

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 28/02/2019.

**முதல் விசாரணை:**

நான் தற்போது மும்பையில் வேலை பார்த்து வருகிறேன். சொந்த ஊர் கோவில்பட்டி, சாஸ்திரி நகர். ஆஜர் எதிரியை தெரியும். எதிரி ஆறுமுகத்தை தெரியும். ( எதிரி ஆறுமுகத்திற்காக கு.வி.மு.ச 317 மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது). 1வது எதிரி ஆறுமுகம் சம்பவம் நடப்பதற்கு முன்பு 3 மாதம் வரை என் வீட்டுக்கு பக்கத்தில் தான் குடியிருந்து வந்தார். ஆறுமுகத்தை பார்ப்பதற்காக 2ம் எதிரி துரைப்பாண்டி அடிக்கடி அவருடைய வீட்டிற்கு வருவார். அந்த வகையில் எனக்கு அவரை தெரியும். 06.01.2014ம் தேதி எங்கள் ஊரிலிருந்து தட்டப்பாறை வழியாக திருச்செந்துார் கோவிலுக்கு பாதயாத்திரையாக சுமார் 10 பேர் சென்றோம். தட்டப்பாறை பக்கத்தில் உள்ள

கல்குவாரிக்கு அருகில் நான் வரும்போது மதியம் சுமார் 03.45 மணியலிருந்து 4 மணிக்குள் இருக்கும் எதிரிகள் இருவரும் என்னை வழிமறித்து தேவடியாமகனே இதோடு செத்து தொலை என்று ஆறுமுகம் துப்பாக்கி சைஸ் அரிவாளால் என்னை வெட்டினார். தலையில், கண் ஓரத்தில், வலது மணிக்கட்டு பக்கத்தில், வலது முழங்கையில் மாறி மாறி வெட்டினார். ஆஜர் எதிரி துரைப்பாண்டி எனக்கு பின் பக்கத்தில் இருந்து தலையில் கோழிவால் பெரிய அரிவாள் வைத்து தலையின் பின்னாடி இதோடு செத்து தொலை என்றும் தேவடியாமகனே என்றும் அசிங்கமாக பேசி வெட்டினார். துரைப்பாண்டி இடது கை விரல், உள்ளங்கை பக்கத்திலும் வலது காலிலும், இடது காலிலும் துரைப்பாண்டி வெட்டினார். தலையில் வெட்டியதில் எனக்கு மண்டை ஓடு உடைந்து விட்டது. எனக்கு ஆபரேசன் செய்தததில் தற்போது தற்போது மண்டை ஓடு இல்லை. வலதுகாலில் இரண்டு எலும்பும் முறிந்தும் பிளேட் வைக்கப்பட்டுள்ளது. இடது காலில் வெட்டு காயம் மட்டும் தான் உள்ளது. இடது தொடையிலும், இடது கால் மூட்டுக்கு கீழும் துரைப்பாண்டி வெட்டினார். இதற்கு முன்னாடி டிரைவர் வேலை பார்த்து கொண்டிருந்தேன். தற்போது எனக்கு வலது காலில் ஊனம் ஏற்பட்டிருப்பதால் என்னால் டிரைவர் வேலை பார்க்க முடியவில்லை. தலையில் வெட்டு பட்டதால் எனக்கு அடிக்கடி வலிப்பு வருகிறது. எனக்கு வெட்டப்பட்டவடன் நான் காப்பாற்றுங்கள் காப்பாற்றுங்கள் என்று சத்தம் போட்டேன் ஆனால் என்னுடன் வந்தவர்களை எதிரிகள் இருவரும் நீங்கள் அருகில் வந்தால் உங்களுக்கும் இதே கதி தான் என்று மிரட்டினார்கள். பாதயாத்திரை வந்தவர்கள் கூச்சலிடவும் எதிரிகள் வந்த வண்டியிலேயே திரும்பி போய்விட்டார்கள். என்னை 108 ஆம்புலன்ஸில் தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் சேர்த்தார்கள். என்னுடன் மாணிக் துரை, கணேசன், மாரிச்செல்வம், சின்ன ஜமீன், ரவிக்குமார்,

*மணிகண்டன் மற்றும் சிலரும் வந்திருந்தார்கள். ஆட்டோ ஒன்று எங்களுடன் வரும் அதில் சாப்பாடு வைக்கப்பட்டிருக்கும் அந்த ஆட்டோ டிரைவர் முத்துப்பாண்டியும் சம்பவத்தை பார்த்தார். மருத்துவமனையில் வைத்து என்னை போலீசார் விசாரித்தார். அதன்பின்பு என் அம்மா என்னை தனியார் மருத்துவமனைக்கு கூட்டி கொண்டு சென்று விட்டார்கள். என்னிடம் காட்டப்படும் துப்பாக்கி சைஸ் அரிவாள் சா.பொ. 1. கோழிவால் அரிவாள் சா.பொ. 2*

கு.வி: இல்லை